www.nammakalvi.org


# ஸ்ரீ வித்யபாரதிமெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம்,அகரம் (po),எலச்சிப்பாளையம்

திருச்செங்கோடு(Tk) நாமக்கல்(Dt) 637202.

Cell :99655 31727, 94432 31727


## அரையாண்டுப் பொதுத் தேர்வு டிசம்பர் - 2018

### சமூக அறிவியல் விடைக்குறிப்புகள்

மதிப்பெண்கள்:100

| வினா எண். | விடைக்குறிப்புகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| | **பிரிவு - I (22 மதிப்பெண்கள்)**<br>**பகுதி - I**<br>**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** | **14x1=14** |
| 1. | a) பீகிங் | 1 |
| 2. | a) ஹெலிகோலாந்து | 1 |
| 3. | d) மின்னல் போர் | 1 |
| 4. | b) சுவாமி விவேகானந்தர் | 1 |
| 5. | a) டாக்டர் இராஜேந்திர பிரசாத் | 1 |
| 6. | b) அமைதி | 1 |
| 7. | d) வியாபாரிகள் | 1 |
| 8. | d) நீலகிரி குன்று | 1 |
| 9. | b) பூனா | 1 |
| 10. | c) வண்டல் மண் | 1 |
| 11. | a) வான்வழி | 1 |
| 12. | a) மொத்தநாட்டு உற்பத்தி - தேய்மானம் | 1 |
| 13. | b) 1991 | 1 |
| 14. | b) கலப்பு பொருளாதாரம் | 1 |
| 15. | **பிரிவு - II**<br>**இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.**<br>**பொருத்துக:** | **2x5=10** |
| i | a) ஜீன் மோனட் - பிரெஞ்சு அரசியல்வாதி<br>b) அட்லாண்டிக் சாசனம் - எப்.டி.ரூஸ்வெல்ட்<br>c) ஃப்யூரர் - தலைவர்<br>d) எல்லை காந்தி - கான் அப்துல் காபர் கான்<br>e) வைக்கம் வீரர் - ஈ.வே. ராமசாமி பெரியார் | |
| ii | a) சணல் தொழிலகங்கள் - மேற்கு வங்காளம்<br>b) அலைசக்தி - விழிஞ்சம்<br>c) உலக வெப்பமயமாதல் - பசுமைவீடு<br>d) அமில மழை - சல்பர்-டை-ஆக்ஸைடு<br>e) TIROS - I - செயற்கைக்கோள் | |

ஸ்ரீ வித்யபாரதி

www.nammakalvi.org

| | | |
|---|---|---|
| | **பிரிவு - II**<br>**ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறுவிடை தருக.** | **10x2=20** |
| | **பகுதி - I** | |
| 16. | **ஏகாதிபத்தியம்**<br>*ஏகாதிபத்தியம் என்ற சொல் **இம்பிரியம்** (Impeirum)என்ற லத்தீன் சொல்லிருந்து வந்தது. இதன் பொருள் ஆதிக்கம் (Power) என்பதாகும்.*<br>ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.<br>**(அல்லது)**<br>ஒரு நாட்டின் ஆட்சி மற்றொரு நாட்டின் மீது திணிக்கப்படுதல்<br>**(அல்லது)**<br>ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களைத் தன் வசப்படுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகும். | **2** |
| 17. | **சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்**<br>• பொதுச்சபை<br>• நிர்வாக சபை (மன்றம்)<br>• செயலகம்<br>• சர்வதேச நீதி மன்றம்<br>• சர்வதேச தொழிலாளர் அமைப்பு | 2 |
| 18. | **தேசிய தொழில் மீட்புச் சட்டம்**<br>தேசிய தொழில் மீட்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணி நேரக்குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. | 2 |
| 19. | **அழித்து பின்வாங்கும் கொள்கை**<br>• **1941ஆம் ஆண்டு ஜீன் 22ம் நாள்** இரஷ்யாவுடன் செய்து கொண்ட போர்தொடுக்காத ஒப்பந்தத்தை மீறி ஹிட்லர் இரஷ்யா மீது படையெடுத்தார்.<br>• இந்த இக்கட்டான சூழ்நிலையில் ரஷ்யாவில் குளிர்காலம் தொடங்கியது<br>• எனவே, ஜெர்மானியப் படைகள் மாஸ்கோவில் தங்கிவிட்டன. ஸ்டாலின் மாஸ்கோ நகரத்தை அழித்ததோடு மட்டுமில்லாமல், அரசு அலுவலகங்கள் அனைத்தையும் வெளியேறச் செய்தார்.<br>• இரஷ்யர்கள் அழித்துப் பின்வாங்கும் கொள்கையினைப் பின்பற்றினர்.<br>• அதன் மூலம் பயிர்கள், பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க அவற்றை தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர்.<br>• ஜெர்மானியப் படைகளுக்கு எதுவும் கிடைக்கவில்லை. ஐந்து மாதங்களுக்குப்பின் மிகுந்த சிரமத்திற்குப் பிறகு மாஸ்கோவை ஜெர்மானியர்கள் கைப்பற்றினர்.<br>• ரஷ்யாவில் ஏற்பட்ட படுதோல்விக்குப் பின் ஜெர்மனி **1944ஆம்** ஆண்டு சனவரி மாதம் நாடு திரும்பியது. | 2 |
| 20. | • புரட்சி நாடு முழுவதும் பரவவில்லை. வடஇந்தியாவில் மட்டுமே புரட்சி மையம் கொண்டிருந்தது. தென்இந்தியா, பஞ்சாப், சிந்து மற்றும் இராஜஸ்தான் இப்புரட்சியில் பங்கேற்கவில்லை.<br>• இந்தியாவின் பல்வேறு மன்னர்களும், செல்வம் மிக்க ஜமீன்தார்களும் இப்புரட்சியில் பங்குகொள்ளவில்லை.<br>• இப்புரட்சியை ஆதரிக்காத இந்திய அரசர்கள் நடுநிலை வகித்தனர்.<br>• பொதுவாக படித்த இந்தியர்கள் இப்புரட்சியை ஆதரிக்கவில்லை. | 2 |
| 21. | **தியோசோபி**<br>**'தியோஸ்'** என்றால் **'கடவுள்'** என்றும் **'சோபாஸ்'** என்றால் **'அறிவு'** என்றும் பொருள்படும். ஆகவே, **'தியோசோபி'** என்றால் **'கடவுளைப்பற்றிய அறிவு'** என்று பொருள்படும். | 2 |
| 22. | **மவுண்ட் பேட்டன் திட்டம்**<br>இத்திட்டத்தின்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இரு நாடுகளாகப் பிரிக்கப்படும். | 2 |

www.nammakalvi.org

| | | |
|---|---|---|
| 23. | **வீரத்தமிழன்னை**<br>வீரத்தமிழன்னை என்று அழைக்கப்பட்டவர் டாக்டர். தர்மாம்பாள்.<br>தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தமிழறிவை வளர்க்கவும், அரசுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறவும், பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ளவும் சென்னை மாணவர்கள் மன்றம் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றினார்.<br>இவர் தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி 'வீரத்தமிழன்னை' என்ற பட்டம் வழங்கப்பட்டது. | 1<br><br>1 |
| | **பகுதி - II** | |
| 24. | சார்கின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் போக்குவரத்து கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை மற்றும் கிராமப் புணரமைப்பு மற்றுத் தகவல் தொடர்ப போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. | 2 |
| 25. | **மக்களாட்சி**<br>மக்களாட்சி என்பது 'மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சிசெய்வது' ஆகும். **மக்களாட்சியின் வகைகள்:**<br>1. நேரடி மக்களாட்சி<br>2. மறைமுக மக்களாட்சி | 2 |
| | **பகுதி - III** | |
| 26. | **இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள முக்கிய புனித தலங்கள்**<br>• அமர்நாத்,<br>• கேதார்நாத்,<br>• பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவி தேவி கோவில் | 2 |
| 27. | **மிக அதிக மழை பெறும் பகுதிகள்**<br>300 செ.மீக்கும் அதிகமான மழைபெறும் கிழக்கு இமயமலையின் தெற்குசரிவு, அஸ்ஸாம், வங்காளம், கொங்கணம் மற்றும் மலபார் கடற்கரையை உள்ளடக்கிய மேற்கு கடற்கரைப் பகுதிகளாகும். | 2 |
| 28. | **மிக நுண்ணிய சத்துப்பொருட்கள்**<br>• கந்தகம், குளோரின், செம்பு, மாங்கனீசு, மாலிப்தீனம், போரான், இரும்பு, கோபால்டு, துத்தநாகம்<br>**பெரிய சத்துப்பொருட்கள்**<br>• நைட்ரஜன், பொட்டாசியம், மற்றும் பாஸ்பேட்கள் | 1<br><br>1 |
| 29. | **இந்திய வேளாண்மையிலுள்ள ஏதேனும் இரு சாவல்கள்**<br>• இந்திய வேளாண்மை ஒரு பருவக்காற்றின் சூதாட்டம் என வர்ணிக்கப்படுகிறது. பருவக்காற்றுகள் ஒழுங்காகவும் சீராகவும், குறித்த காலத்திலும் வீசுவதில்லை. இதனால் வேளாண்மைக்கு சாதகமான சூழ்நிலை அமைவதில்லை.<br>• பெருகிவரும் சாலைகள், ரயில் பாதைகள் மற்றும் கால்வாய்களின் கட்டுமானப் பணியால் மழைநீர் இயல்பான ஓட்டம் தடுக்கப்பட்டு இயற்கையான வடிகால் அமைப்பில் நீரோட்டத்தடை ஏற்படுகிறது. இதனால் கோடைகாலப்பயிர்கள் மிகப்பெரிய அளவில் அழிவதுடன், குளிர்காலப்பயிர்கள் பயிரிடுவதிலும் தாமதம் ஏற்படுகிறது.<br>• தொழிற்சாலைகளும், குடியிருப்பு கட்டடங்களும் கட்டப்பட்டு வருவதால் வேளாண் நிலங்களின் பரப்பும் குறைந்து கொண்டே வருகிறது.<br>• உலக அளவில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயிர்கள், மண், கால்நடைகள் மற்றும் பூச்சிகள் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவற்றின் மூலம் வேளாண்மையும் பாதிக்கப்படுகின்றது.<br>• அதிக வேளாண்மை உற்பத்திக்காக இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளால் சுற்றுச்சூழ்நிலை மற்றும் இயற்கை வளங்கள் சீர்கேடு அடைவதால் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் விளைபொருட்களின் அளவைப் பெருக்குவதில் மட்டுமின்றி அவற்றின் தரத்தை உறுதி செய்யும வகையில், தொழில்நுட்பம் அமைதல் வேண்டும். இதனால் வேளாண்மை உற்பத்தியில் நிலையான முன்னேற்றம் காண இயலும். | 2 |

ஸ்ரீ விக்னேஷ்

| | | |
|---|---|---|
| 30. | **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்**<br>• வேளாண் சார்ந்த தொழிலகங்கள் வேளாண் பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன.<br>• எடுத்துக்காட்டாக பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள் மற்றும் சர்க்ரை ஆலைகள். | 2 |
| 31. | **ஒலி மாசுபடுதல்**<br>பசுமை மண்டலங்களை உருவாக்குவதற்கான மூலம் ஒலி அளவைக் குறைக்கலாம். நெடுஞ்சாலை ஓரங்களிலும் மக்கள் கூட்டம் அதிகமுள்ள இடங்களிலும் டெசிபல் மீட்டர் கருவிகளைப் பொருத்தலாம். வீடுகள், பள்ளிகள், மருத்துவமனை போன்ற இடங்களில் மதிற்சுவரை ஒட்டி மரங்கள் வளர்க்கலாம். | 2 |
| 32. | **மக்கள் தொடர்பு சாதனங்கள்**<br>1. வானொலி<br>2. தொலைக்காட்சி<br>3. செய்தித்தாள்<br>4. இணையதளம் | 2 |
| 33. | **பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள்**<br>பேரிடர் அபாயதேர்வு குறைப்பில் சில முக்கிய அம்சங்கள் உள்ளன.<br>• தணித்தல்<br>• ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு<br>• பேரிடர் வரும்முன் தயாரிநிலை<br>• மீட்பு | 2 |
| | **பகுதி - IV** | |
| 34. | **தலா வருமானம்**<br>• நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் என்றழைக்கப்படுகிறது.<br>• மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளக்கப் பயன்படும் கருவி தலா வருமானமாகும்.<br>• தலா வருமானம் உயர்ந்ததால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகக் கருதப்படும்.<br>**தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை** | 2 |
| 35. | **பன்னாட்டு நிறுவனங்கள்**<br>• பன்னாட்டு நிறுவனங்கள் என்பது பல நாடுகளில் தங்களது தொழிற் நிறுவனங்களை தொடங்கி நடத்தி வரும் அமைப்பாகும்.<br>• **எ.கா: நோக்கியா,போர்டு,குண்டாய்** | 2 |
| | **பிரிவு - III (மதிப்பெண்கள் 8)**<br>**ஏதேனும் நான்கினை வேறுபடுத்திக்காட்டுக** | **4x2=8** |
| 36. | **டெல்டா - கழிமுகம்** | 4 |

| **டெல்டா** | **கழிமுகம்** |
|---|---|
| ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிவிலான வண்டல் படிவுகளை டெல்டா என்கிறோம். | ஆற்று முகத்துவாரத்தில் ஓதங்களின் காரணமாக ஆற்றின் நல்ல நீரும் கடலின் உப்புநீரும் ஒன்று கலக்கிறது. இப்பகுதி டெல்டாபோல் இல்லாமல் ஆழமாக இருக்கும். |
| எ.கா. காவிரி டெல்டா | எ.கா. நர்மதை மற்றும் தபதி ஆற்றின் கழிமுகப்பகுதிகள் |

37. **காற்று மோதும் பக்கம் - காற்று மோதாப் பக்கம்**

| **காற்று மோதும் பக்கம்** | **காற்று மோதாப் பக்கம்** |
|---|---|
| இது காற்று வீசும் திசையை நோக்கியுள்ள மலைச்சரிவு | இது காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ள மலையின் மறுப்பக்க சரிவு |
| இது அதிக மழையை பெறுகிறது | இது குறைந்த மழையை பெறுகிறது |
| **எ.கா**<br>மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்கு சரிவு**(மும்பை)150 செ.மீ** | **எ.கா**<br>மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு சரிவு**(புனே) 50 செ.மீ** |

4

38. **வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள் - வெப்பமண்டல பருவக்காற்று காடுகள்**

| **வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள்** | **வெப்பமண்டல பருவக்காற்று காடுகள்** |
|---|---|
| ஆண்டு மழைப் பொழிவு **200 செ.மீ** க்கும் அதிகமான மழை பெறும் பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன | ஆண்டு மழைப் பொழிவு **70 செ.மீ** முதல் **200 செ.மீ** வரை சராசரி மழை பெறும் பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. |
| இக்காடுகளில் உள்ள மரங்கள் எப்பொழுதும் பசுமை நிறம் மாறாமலும், தங்களின் இலைகளை உதிர்க்காமலும் காணப்படுகின்றன. | இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்தக் காலத்திலும், கோடைகாலத்தில் முற்பகுதியிலும் சுமார்6 முதல் 8 வாரங்களுக்குள் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. |
| இங்கு ரோஸ் மரம், ரப்பர், மூங்கில், **எபானி மகோகனி**, சின்கோனா மற்றும் லயனாஸ் போன்ற முக்கியமான மரங்கள் இக்காடுகளில் காணப்படுகின்றன. | இங்கு சந்தனமரம், தேக்கு, சால், சிசம், வேப்பமரம் மற்றும் வேட்டில் போனற முக்கியமான மரங்கள் இக்காடுகளில் காணப்படுகின்றன. |

4

39.

**உணவுப்பயிர்கள் - பணப்பயிர்கள்**

| **உணவுப்பயிர்கள்** | **பணப்பயிர்கள்** |
|---|---|
| மக்களின் தேவைக்காக பயிரிடப்படுகிறது | வணிகத்திற்காகவும் லாபம் கருதியும் பயிரிடப்படுகிறது |
| மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்கிறது | நாட்டிற்கு அந்நிய செலாவணியை அதிகரிக்கச் செய்கிறது |
| **எ.கா.** அரிசி, கோதுமை, தினைப்பயிர்கள் | **எ.கா.** பருத்தி, கரும்பு, புகையிலை |

40.

**காற்று மாசடைதல் - ஒலி மாசடைதல்**

| **காற்று மாசடைதல்** | **ஒலி மாசடைதல்** |
|---|---|
| தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் வெளியிடப்படுவதால் காற்று மாசடைகிறது. | மனிதர்கள் அல்லது இயந்திரங்களினால் ஏற்படும் ஒலியினால் ஒலி மாசடைதல் ஏற்படுகிறது. |
| எரிமலை வெடிப்பு காற்றில் மகரந்த பரவல் ஆகியவை இயற்கையினால் காற்று மாசடைகிறது.<br>இது மக்களின் நல்வாழ்வினைப் பாதிக்கிறது. | இது மனித, விலங்குகளின் சமநிலையை பாதிக்கிறது. |
| காற்று மாசடைவதால் சுவாசக்கோளாறு, நுரையீரல்நோய், ஒவ்வாமை, இதயநோய் போன்றவற்றை ஏற்படுத்தும். | இது மன அழுத்தம், படபடப்பு, கேட்கும் திறன்குறைதல், போன்றவற்றை ஏற்படுத்தும் |

4

www.nammakalvi.org

41. **தேசிய நெடுஞ்சாலைகள் - மாநில நெடுஞ்சாலைகள்**

| தேசிய நெடுஞ்சாலைகள் | மாநில நெடுஞ்சாலைகள் |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் மாநில தலைநகரங்களை தேசிய தலைநகரத்துடன் இணைக்கிறது. | மாநில நெடுஞ்சாலைகள் மாநிலத்தின் தலைநகரடத்துடன் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களை இணைக்கிறது. |
| தேசிய நெடுஞ்சாலைகள் மத்திய பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்டு,பராமரிக்கப்படுகின்றன | மாநில நெடுஞ்சாலைகள் மாநில பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. |
| தேசிய நெடுஞ்சாலைகள் **92851 கி.மீ** நீளத்திற்கு இந்தியாவில் அமைந்துள்ளன. | மாநில நெடுஞ்சாலைகள் **1,31,899 கி.மீ** நீளத்திற்கு இந்தியாவில் அமைந்துள்ளன. |

42. **தொலைபேசி - கைபேசி**

| தொலைபேசி | கைபேசி |
|---|---|
| தொலைபேசி என்பது வாய்வழி தகவல் தொடர்பு முறையாகும். | எங்கு நாம் சென்றாலும் எடுத்துச்செல்லவும் மக்களுடன் தொடர்பு கொள்ளவும் பயனுடையதாக இருக்கிறது. |
| குறுஞ்செய்திகளை அனுப்ப இயலாது. | குறுஞ்செய்திகளை அனுப்பலாம். |
| தொலைபேசி அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒரு சாதனமாகும். ஏனெனில் உடனடியாக தொடர்பு கொள்ள ஏதுவாகிறது. | வெகு தொலைவிலுள்ள கிராமப்பகுதி முதல் மிக உயர்ந்த மலைப்பகுதிகள் வரை இதன்மூலம் சுலபமாக தொடர்பு கொள்ள முடியும். |

4

43. **வாகன தொழிலகம் - மென்பொருள் தொழிலகம்**

| வாகன தொழிலகம் | மென்பொருள் தொழிலகம் |
|---|---|
| இது வணிகவளம் சார்ந்த தொழிலகம் ஆகும். | மென்பொருள் தொழிலகம் இந்தியப்பொருளாதாரத்தில் முக்கியத் தொழிலகமாகத் தோன்றி வளர்ந்து வருகிறது. |
| சுதந்திரம் அடைந்த பின்வ வாகன தொழிலகங்கள் வளர்ச்சி அடையத்தொடங்கின. | இத்தொழிலகம் நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களில் காணப்படுகிறது. |
| உலகப்புகழ் பெற்ற நிறுவனங்களான சுசுகி, ஹோண்டா, ஃபோர்டு, மகிந்திரா போன்றவைகளும் வாகன உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. | 500க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன. |

4

**பிரிவு - IV (மதிப்பெண்கள் 8)**
**கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அனைத்துவினாக்களுக்கும் விடையளி** **2x4=8**

44. **முதல் உலகப்போர்:**

**a)** கி.பி 1914ஆம் ஆண்டு **ஜீலை** 28ஆம் நாள் தொடங்கி 1918 ஆம் ஆண்டு **நவம்பர் மாதம்** 1ஆம் நாள் முடிவுற்றது.

**b)** ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகள் மைய நாடுகள் ஆகும். இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் நேச நாடுகள்

**c)** 1916 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜுட்லாண்டு போரில் போரிட்ட நாடுகள் ஆகும்.

**d)** 1919ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்குவந்தது.

4

நம்ம கல்வி

| | | |
|---|---|---|
| 45. | **அடால்∴ப் ஹிட்லர் :**<br>**a)** அடால்∴ப் ஹிட்லர் **1889**ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் பிறந்தார்.<br>**b)** ஹிட்லர் நாசிசக் கட்சியை **1919**ஆம் ஆண்டு தோற்றுவித்தார்.<br>**c)** ஹிட்லரின் ஆதரவாளர்கள் **'பழுப்புச் சட்டையினர்'** என அழைக்கப்பட்டனர்<br>**d)** ஹிட்லரின் இரகசிய காவல்படையின் பெயர் கெஸ்டபோ. | 4 |
| 46. | **இராமலிங்க அடிகள் :**<br>**a)** இராமலிங்க அடிகள் அனைவராலும் வள்ளலார் என அழைக்கப்பட்டார்<br>**b)** ஜீவ காருண்யம் என்பதன் பொருள் "உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்" ஆகும்.<br>**c)** இராமலிங்க அடிகளார் ஏழைகளின் பசியைப் போக்க சத்திய தருமசாலையை நிறுவினார்<br>**d) திருவருட்பா** இராமலிங்க அடிகளாரின் பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். | 4 |
| 47. | **சி.இராஜகோபாலாச்சாரி:**<br>**a)** இராஜகோபாலச்சாரியார் டிசம்பர் 10, 1878ம் ஆண்டு தொரப்பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார்.<br>**b)** இராஜகோபாலச்சாரி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி **"சுதந்திரக்கட்சி"**<br>**c)** "சக்கரவர்த்தி திருமகள், வியாசர் விருந்து" ஆகியவை இராஜாஜியால் எழுதப்பட்ட புத்தகங்கள் ஆகும்.<br>**d)** இராஜகோபாலச்சாரியாரின் தந்திரமான அரசியல் செயல்களால் சாணக்கியர் என அறியப்படுகிறார். | 4 |
| | **பிரிவு - V (மதிப்பெண்கள் 20)**<br>**நான்கு வினாக்களுக்கு விடையளி** | **4x5=50** |
| 48. | **a) ஏகாதிபத்தியதின் விளைவுகள் :**<br>**சாதகமான விளைவுகள் :**<br>1. வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்புத்துறையில் பலமுன்னேற்றங்களை ஏற்படுத்தின.<br>2. அந்நாடுகள் குடியேற்ற நாடுகளுக்கு கல்வி வழங்கி, மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறைகளை மேம்படுத்தின.<br>3. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தன.<br>4. இத்தகைய மாற்றங்கள் குடியேற்ற நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின.<br>5. இது நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமையை வளர்த்தன.<br>**பாதகமான விளைவுகள் :**<br>1. குடியேற்ற நாடுகள் தங்களின் சுதந்திரத்தை இழந்தன.<br>2. மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டதோடு அவர்கள் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர்.<br>3. குடியேற்ற நாடுகள் மூலப்பொருள்களை வழங்குவதற்கும் பொருள்களின் விற்பனைச் சந்தைகளாகவும் மட்டுமே விளங்கின.<br>4.அந்நாடுகளில் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு, ஏழ்மையும் வேலையின்மையும் அதிகரித்தன.<br>5. பாரம்பரிய விவாசய முறை மாற்றப்பட்டு, உணவுப்பொருள் உற்பத்திக்குப் பதிலாக மூலப்பொருள்களை பயிரிடும்படி அந்நாட்டு மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். மேற்கத்திய கலாச்சார அறிமுகம், பாரம்பரிய கலாச்சாரத்தின் அழிவுக்கு வழிகோலியது.<br>6. அடிமை வியாபாரத்தின் காரணமாக சில ஆப்பிரிக்க இனங்களின் மறைவுக்கும் இது காரணமாயிற்று. சில குடியேற்ற நாடுகளில் இன வேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட, ஏகாதிபத்தியமே காரணமாயிற்று. | 5 |
| | **b) ஐ.நா.வின் முக்கிய சாதனைகள் :**<br>• பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு ஐ.நா. சபை அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு கண்டு உலக அமைதியை பாதுகாத்து வருகிறது. அரசிலய் பிரச்சனைகளுக்கு பாதுகாப்பு ன்றம் மூலமும், சட்டப்பிரச்சனைகளுக்கு பன்னாட்டு நீதிமன்றம் மூலமும், பிற பிரச்சனைகளுக்கு சிறப்பு அமைப்புகள் மூலமும் தீர்வு காணப்படுகிறது. | |

| | | |
|---|---|---|
| | • இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம், ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்த இரஷ்யப்படைகளை வெளியேறும்படியும் செய்தது.<br>• 1963ஆம் ஆண்டுஅணு சோதனை தடைச்சட்டத்தையும் 1996 ஆம் ஆண்டு தொடா் அணுசோதனை தடைச்சட்டத்தையும் நிறைவேறச் செய்தது.<br>• 1992 ல் ரியோ-டி-ஜெனிரோவில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் அறிக்கை 21 என்ற கோட்டிபாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து, பொருளாதார மேம்பாடடைய உறுதிபூண்டன.<br>• ஐ.நா.வின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பன்னாட்டு ஆய்வு மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சி நிறுவனங்கள் மூலம் 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கான நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் ஊக்கவித்தன.<br>• 1956 ஆம் ஆண்டில் எகிப்து அதிபா் நாசா், சூயஸ் கால்வாயை நாட்டுடமையாக்கினாா். இதனை பிரிட்டன, பிரான்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிா்த்தன. ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவக்கு கொண்டு வந்தது.<br>• இதோடு மட்டுமல்லாமல் கொரிய, வியட்நாம் போா்களையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. | 5 |
| | **c) நீதிக்கட்சியின் ஆட்சி:**<br>1920 ஆம் ஆண்டு நடைபெற்ற தோ்தலில், நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு. சுப்பராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது. 1923 ஆம் ஆண்டு நடந்த தோ்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைந்தது. 1926 ஆம் ஆண்டுத் தோ்தலில் சுயராஜ்ஜியக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது. எனவே சுயேட்சை வேட்பாளரான திரு. சுப்பராயலு, சுயராஜ்ஜியக் கட்சியின் உதவியுடன் ஆட்சி அமைத்தாா். 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற தோ்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ப.முனிசாமி நாயுடு தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆனால் 1932 ஆம் ஆண்டு இவரை பதவி நீக்கிவிட்டு பொப்பிலி இராஜாபதவியேற்றாா். 1934 ஆம் ஆண்டுத் தோ்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆடுசி அமைக்க மறுத்து விட்டது. எனவே நீதிக்கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தது. 1937ஆம் ஆண்டு நடைபெற்ற தோ்தலில் நீதிக்கட்சி படுதோல்வியடைந்து மீண்டும் எழவேயில்லை. பெரியாா் மற்றும் அவரது சுயமரியாதை இயக்கத்தின் கட்டுப்பாா்டில் சிறிது காலம் நீதிக்கட்சி செயல்பட்டது. 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த மாநாட்டில் பொயிா் நீதிக்கட்சியின் பெயரை திராவிடா் கழகம் என மாற்றம செய்து அதை ஒரு சமுதாய இயக்கமாக மாற்றினாா். இதன்மூலம் நீதிக்கட்சி அரசியல் இயக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.<br>**நீதிக்கட்சியின் சாதனைகள்**<br>நீதிக்கட்சியின் ஆட்சி சாதி அடிப்படையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் மச் சீா்திருத்தங்களுக்காக அனைவராலும் நினைவு கூறப்படுகிறது. இந்தியஅரசியலில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்று, பல பிரச்சனைகளை மன உறுதியோடு சந்தித்து, சிறிது காலம் நலாட்சி வழங்கியது. பொருளாதாரம் மற்றும் சமூக சீா்த்திருத்தங்கள் மூலம் கிராமங்கள் முன்னேற்றம என்ற புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தியது.<br>நீதிக்கட்சி அனைத்து சவுகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம் பெற வழிசெய்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயா்த்தியது.<br>சமூக அரசாணை 1921 மற்றும் 1922 மூலம் பாா்ப்பனா் அல்லாதவா்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி சிறுவனற்களின் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.<br>எதேச்சதிகாரம், செல்வாக்கு, அனுகூலத் தோ்வு முறையை ஒழிக்க, 1924 ஆம் ஆண்டு பணியாளா் தோ்வு வாரியத்தை ஏற்படுத்தியது. இது 1929 ஆம் ஆண்டு பொதுப்ப ணி தோ்வாணையமாக மாறியது.<br>உயா்கல்வி நிலையங்களை நெறிப்படுத்துவதற்காகவும், அனைத்து சமூகத்தினரும் பயன்பெறவும் கல்லூரிக்கமிட்டிகள் அமைக்கப்பட்டன.<br>1925 ஆம் ஆண்டு ஆந்திரா பல்கலைக்கழகம் மற்றும் 1929 ஆம் | 5 |

www.nammakalvi.org

| | | |
|---|---|---|
| | ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டன.<br>கோவில் வரவு செலவுக் கணக்குகளை முறைப்படுத்த கோயில் குழுக்கள் அமைக்கப்பட்டன. 1926 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டு வரப்பட்டது.<br>1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. பெண்கள் வன்கொடுமைத் தடைச்சட்டம் மற்றும் தொழிலாளர் நலச்சட்டங்கள் இயற்றப்பட்டன.<br>ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் தியாகராயச் செட்டியாரால் இலவச மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.<br>இக்கட்சி ஆயுர்வேதம், சித்தமருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது. | |
| 49. | **a) பஞ்சசீலம் :**<br>இந்தியா 'ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு' என்றழைக்கப்படுகிறது. இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால்நேரு 1955 இல் பாண்டுங் மாநாட்டில் அமைதிக்காக 5 அம்சக்கொள்கையினை வெளியிட்டார். அவை 'பஞ்சசீலம்' என அழைக்கப்படுகிறது.<br>❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்.<br>❖ எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக்கூடாது.<br>❖ ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக்கூடாது.<br>❖ அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பரநல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.<br>❖ ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.<br>❖ இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.<br>**அணிசேராக் கொள்கை:**<br>❖ இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாக பிரிந்தன.<br>❖ அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளும் தங்களது செல்வாக்கை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகளில் இறங்கின.<br>❖ இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன.<br>❖ இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணி சேரா நாடாக) விளங்கி வருகிறது.<br>❖ இந்த இரண்டு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு, தொடர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது. | 5 |
| | **b) தேசிய ஒருமைப்பாடு**<br>புவியியல் அமைப்பு, அதனையொட்டிய மக்களின் வாழ்க்கைமுறை, பலதரப்பட்ட பழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, சஉடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர் இருப்பினும், இந்தியாவின் பாரம்பரியத்தினால் ஒன்றுபடுகின்றனர். மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, அனைத்து மதத்தையும் சகித்துக்கொள்ளும் தன்மை போன்றவை இந்தியர்கள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ வழிசெய்கின்றன.<br>இந்தியர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன. இது தவிர தேசியச் சின்னங்கள், தேசியக்கொடி மற்றும் தேசிய கீதம் போன்றவையும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு, பிரிந்தால் வீழ்ச்சி என்ற உணர்வு இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. இத்தகைய இந்திய ஒற்றுமை சிந்துசமவெளி காலத்திலிருந்து இன்றுவரை இந்திய கலாச்சாரத்தால் நிலை நாட்டப்பட்டு வருகிறது. | 5 |

| | | |
|---|---|---|
| | **c) நுகர்வோரின் உரிமைகள்**<br>♣ நுகர்வோரின் உரிமைகள் இந்திய சட்டத்தில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. இதனை வியாபார சமூகத்தினர் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும். நுகர்வோரின் பொருட்கள் அவர்களது உயிருக்கும், அவர்களது உடைமைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் அவர்களது சேவைகள் குறித்தும் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமைப் பெற்றுள்ளனர்.<br>♣ பொருட்களின் தரம், அளவு , தன்மை அதனுடைய உண்மை நிலை ,பொருட்களின் விலை ஆகியவைக் குறித்த உண்மையான நிலைகளை தெளிவாக நுகர்வோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.<br>♣ பலவகையான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கான வாய்ப்பும் , வசதிகளும் செய்துக் கொடுக்கப்படுவது தனிப்பட்ட வியாபாரியிடமிருந்து நுகர்வோர் பொருளை வாங்கும்போது அந்தப் பொருள் தரமானதாகவும் , நியாயமான விலையில் இருக்கிறது என்று சொல்வதற்கும் உரிமைப் பெற்றுள்ளனர்.<br>♣ நுகர்வோரின் நலங்கள் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்படவேண்டும். தவறான வியாபார முறைகள் குறித்தோ அல்லது நுகர்வோர் தாங்கள் சுரண்டப்படுகின்றவேளையிலோ தங்களுக்கு சரியான தீர்ப்பு கிடைக்கும் வகையில் நுகர்வோர் தங்களது குறைகளை எடுத்துக்கூறி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.<br>♣ நுகர்வோரின் நலனுக்கான பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 12 –ம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் பொது நிறுவனங்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்துக் கொள்வது பொது மக்களின் அடிப்படை உரிமையாகும். | 5 |
| 50. | **a) இமயமலைகளின் முக்கியத்துவம்**<br>• இந்தியாவின் வடபகுதியில் உள்ள இமயமலைகள் தென்மேற்கு பருவக்காற்றினைத் தடுத்து நல்ல மழைப் பொழிவையும் பனிப்பொழிவையும் நமக்குத் தருகிறது. இம்மலைகள் இல்லாதிருப்பின் இந்தியத்துணைக் கண்டத்தின் பெரும்பகுதி வெப்பமானதாகவும் வறண்ட பாலைவனமாகவும் மாறியிருக்கக்கூடும்.<br>• இமயமலைகள் இந்தியத் துணை கண்டத்தின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளன. இங்கு பனி எப்பொழுதும் உறைந்து காணப்படுவதால் அந்நிய படையெடுப்பை தடுக்கிறது.<br>• இமயமலை கங்கை மற்றும் பிரம்மபுத்திரா போன்ற பல வற்றாத ஜீவநதிகளின் பிறப்பிடமாக அமைந்துள்ளது.<br>• இது பல கோடை வாழிடங்களையும் மற்றும் பல புனிதத்தலங்களையும் கொண்டுள்ளது.<br>• இது காடு சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை வழங்குகிறது. | 5 |
| | **b) நச்சுப்புகை**<br>புகையும், மூடுபனியும் கலந்த கலவையே நச்சுப்புகை எனப்படும். இது புகை மட்டும் இருட்டான வளிமண்டலத்திற்கு காரணமாகும். பார்வைக்குறைவான மற்றும் மந்தமான சூழ்நிலையை உருவாக்கும்.<br>இது பல காரணங்காளால் உருவாகிறது. வாகனப்புகை, தீ, கழிவுமேலாண்மை, எண்ணெய் உற்பத்தி, தொழிற்சாலை கழிவு, வர்ணக்கலவை மற்றும் வர்ணப்பூச்சு ஆகியன முக்கிய காரணிகளாகும். நச்சுப்புகையில் உள்ள மாசுக்கள் கார்பன் மோனாக்ஸைடு, தூசு, அழுக்குத் துகள்ஈ ஓசோன் போன்றவை. சூரிய ஒளியல் ஹைடிரோகார்பன் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடை சேர்வதால் இது உருவாகிறது.<br>நச்சுப்புகையினால் நுரையீரல் நோய் மற்றும் நிமோனியா ஏற்படுகிறது. நச்சுப்புகை நகரங்களுக்கு மட்டும் பிரச்சனை அல்ல. காற்றினால் மற்ற பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்படுகிறது. நச்சுப்புகையினால் வேளாண்மையும் பாதிக்கப்படுகிறது. | 5 |

| | | |
|---|---|---|
| | **c) தொலை நுண்ணூர்வின் பகுதிகள்**<br>தொலை நுண்ணுணர்வு தொகுதி நான்கு பகுதிகளைக் கொண்டது அவையாவன<br>• இலக்கு<br>• ஆற்றல்மூலம்<br>• பிரதிபலிக்கும் வழி<br>• உணர்வி<br>எந்தப்பொருளைப்பற்றி தகவல்பெற விரும்புகிறோமோ அதனை இலக்கு என்கிறோம். புவியின் பொருட்களை நேரடியாக தொடர்புக் கொள்ளாமல் தகவல்களை சேகரித்து பதிவு செய்வது இத்தொகுதியின் வேலையாகும். ஆற்றல் மூலமாக கருதப்படுவது சூரியன் ஆகும். சூரியன் மின்காந்த ஒளிக்கற்றலை புவிக்கூறுகளுக்கு வழங்குகிறது. இவ்வாற்றல் இரு வகையாக பிரிக்கப்படுகிறது.<br>**இயற்கை முறை மற்றும் செயற்கை முறை**<br>இயற்கை முறை என்பது சூரிய ஒளியில் பொருட்களின் பிரதிபலிப்பு செயற்கை முறையில் ரேடார் கருவி மூலம் பெறப்படும் ஒலியை பிரதிபலித்தது ஆகும். இவற்றுள் மிகக்குறுகிய அலைநீளம் கொண்ட காமா கதிர்கள் முதல் ரேடியோ அலைகள் வரை உள்ளன.<br>இலக்கின் பண்பையும் பிரதிபலிப்பையும் பொறுத்து மின்காந்த அலைகள் இலக்குடன் செயல்படுகிறது. புவிக்கூறுகளின் மீது விழும் சூரிய ஒளியானது மீண்டும் வளிமண்டலத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது.<br>இவ்வாறு பிரதிபலிப்பின் மூலம் இலக்கைப் பற்றிய தகவல்கள் உணர்விகளுக்கு அனுப்பப்படுகிறது. உணர்வி என்ற கருவி மின்காந்த ஒளிக்கற்றைகளை கண்டறிகிறது. உணர்விகள் பெறுகின்ற ஆற்றலை அடிப்படையாக கொண்டு துரித உணர்விகள் மற்றும் மந்த உணர்விகள் என வகைப்படுத்தப்படுகின்றன.<br>மந்த உணர்விகள் இயற்கையான வெப்ப ஆற்றல் பிரதிபலிப்பதை கண்டறிகிறது. எடுத்துக்காட்டாக சூரிய ஒளியில் நமக்கு பிடித்தவற்றை புகைப்பட கருவிமூலம் படம் பிடிப்பதைப் போன்றது. துரித உணர்விகள் இலக்கில் இருந்து குறியீடுகளை வெளிப்படுத்தி பிரதிபலித்து ஆற்றலையும் அளக்கச் செய்கிறது. எடுத்துக்காட்டு ரேடார் கருவி. | 5 |
| 51. | **a) பதினோராவது ஐந்தாண்டுத்திட்டத்தின் நோக்கங்கள்**<br>❖ நீர்பாசன வசதிகள் கிராமங்கள் மின்மயமாதல் மற்றும் கிராமச்சாலைகளை மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்<br>❖ மின்சாரம் மற்றும் உரங்களுக்கான மானியத்தைக் குறைத்தல்<br>❖ வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்<br>❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்தல்<br>❖ வேலைவாய்ப்புகளை விரிவாக்குதல்<br>❖ கிராமப்புற கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல்<br>❖ வறுமையை ஒழித்தல்<br>❖ தொடக்கக்கல்வியில் இடை நிற்றலை குறைத்தல் | 5 |
| | **b) தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்கள்**<br>தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நிலையங்கள் கீழ்க் கண்டவையாகும்.<br>**அனல்மின் உற்பத்தி**<br>தமிழ்நாட்டில் எண்ணூர் தூத்துக்குடி நெய்வேலி மற்றும் மேட்டூரில் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.<br>**நீர்மின் நிலையங்கள்**<br>தமிழ்நாட்டில் நீர்மின் நிலையங்கள் மேட்டூர் குந்தா பெரியார் அணை கோதையாறு அணை பைக்காரா சிங்காரா மற்றும் மாயாரில் அமைந்துள்ளன.<br>**அணுமின் சக்தி உற்பத்தி**<br>அணுமின் சக்தி உற்பத்தி நிலையங்கள் கல்பாக்கத்திலும் கூடங்குளத்திலும் அமைந்துள்ளன.<br>**காற்று மின்சக்தி**<br>மரபுசாரா மின் உற்பத்தியில் காற்று மின்சக்தி தமிழ்நாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கோயமுத்தூர் கன்னியாகுமரி | 5 |

www.nammakalvi.org

தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் காற்றாலைகள் உள்ளன.

**உயிரிபொருட்கள் எரிசக்தி** (Bio mass Energy) இது ஒரு மரபு சாரா மின் உற்பத்தி முறையாகும். இம்முறையில் தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மின் உற்பத்தி நடைபெறுகிறது. உயிரிப்பொருட்கள் எரிசக்தியானது வேளாண்பொருட்களின் கழிவில் இருந்து பெறப்படுகிறது.

**c) நலம் நாடும் அரசுகளின் பணிகள்**

❖ **பாதுகாப்புப் பணிகள்**

❖ ஒரு நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும். எனவே மக்களை அந்நிய நாட்டுப்படையெடுப்பு மற்றும் உள்நாட்டுக் கலவரங்களில் இருந்து பாதுகாப்பதோடு மட்டும் அல்லாமல் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது அரசின் முதன்மைப் பணியாகும்.

❖ **நிர்வாகப் பணிகள்**

❖ மக்கள் பணியாற்றுவதற்கு சட்ட மன்றம் நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாகச் செயல்படுகிறது. 5

❖ **சமூகப்பாதுகாப்புப பணிகள்**

❖ அரசானது சமூகப்பாதுகாப்புப் பணிகளான ஏழைகள் உடல் நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.

❖ **பொருளாதாரப் பணிகள்**

❖ வேளாண்மை வணிகம் மற்றும் தொழிற்வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. இவ்வாறு அரசு தன் பணிகளை செம்மையாக செயல்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளமாகிறது.

**பிரிவு - VI (மதிப்பெண்கள் 5)**
**காலக்கோடு1900 முதல் 1920 வரை**

52.

**அளவுத்திட்டம்: (1 அலகு = 5 ஆண்டுகள்)**




ஸ்ரீ ஸ்ரீ

| | பிரிவு - **VII** (மதிப்பெண்கள் 15) | |
|---|---|---|
| 53. | **a)** ஆசிய வரைபடம்   | |
| | **b)** இந்திய வரைபடம்   | |

| | | |
|---|---|---|
| 54. | இந்திய வரைபடம்   | |


Mrs. C. RAJAMANI M.Phil., Mrs. S. VASANTHA M.A., B.Ed.,

**DEPARTMENT OF SOCIAL SCIENCE**

**SHRI VIDHYABHARATHI MAT.HR.SEC.SCHOOL,**

**SAKKARAMPALAYAM, AGARAM(PO),**

**ELACHIPALAYAM(PO), TIRUCHENGODE(TK),**

**NAMAKKAL(DT). 637 202.**

**CELL NO. 99655 31727 , 80120-31555**


www.nammakalvi.org